# வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி -2010/11

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, வரையறுக்கப்பட்ட கொழும்பு வர்த்தக உரங்கள் கம்பனி 2011 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கேடுகளைப் பேணியுள்ளது எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர வரையறுக்கப்பட்ட கொழும்பு வர்த்தக உரங்கள் கம்பனியின் 2011 மார்ச் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தலில் தாமதம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டு கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2010/2011 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2011 நவம்பர் 14 ஆந் திகதியே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது 04 மாகாண சபைகளுக்கான புரள்வு வரி ரூபா 132,318 ஆல் குறைத்து கணிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 03 மாகாண சபைகளுக்கான ரூபா 1,392,693 தொகையான புரள்வு வரி செலுத்தப்பட்டிராததுடன் செலுத்தப்பட வேண்டியதாக நிதிக்கூற்றுக்களிலும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) குருனாகல் களஞ்சியத்திற்கு கொண்டு செல்லப்படுகையில் யூரியா பசளை இருப்பின் 4.5 மெட்ரிக் தொன் சேதமடைந்திருந்ததுடன் இச் சேதமடைந்த இருப்பு கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் விற்பனைப் பிரிவின் அறிக்கையின் பிரகாரம், ஒட்டுமொத்த விற்பனை அளவு 166,399 மெட்ரிக் தொன்களான ரூபா 1,070,330,373 ஆன போதிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இது 165,867 மெட்ரிக் தொன்களான ரூபா 1,066,854,564 ஆக இருந்ததனால் ஏறத்தாழ 532 மெட்ரிக் தொன்களான ரூபா 3,475,809 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) கடன்பட்டோர் பேரேட்டு மீதிகளுக்கும் மீதிகளின் உறுதிப்படுத்தல்களுக்கும் இடையே ரூபா 2,431,777 பெறுமதியான இணக்கமின்மைகள் 17 சந்தர்ப்பங்களில் அவதானிக்கப்பட்டன.

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2008 ஆம் ஆண்டிற்கு முன்னர் 19 சந்தர்ப்பங்களின் போது ரூபா 235,574 பெறுமதியான முற்பணங்கள் பெறப்பட்டிருந்ததுடன் அம் முற்பணங்கள் 2011 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1994 ஆம் ஆண்டிற்கு முன்னரில் இருந்து நிலவிவரும் 23 கடன்பட்டோர்களுக்கு உரிய ரூபா 23,706,125 தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பதவியணியினர் கடன் மீதியில் சேவையைவிட்டுச் சென்ற, சேவை இடைநிறுத்தப்பட்ட மற்றும் வேலை நீக்கப்பட்ட ஊழியர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 3,546,999 ஆகக் காணப்பட்டது.

(ஈ) 2009/2010 ஆம் ஆண்டு முதல் செலுத்த வேண்டிய வருமான வரிக் கணக்கில் ரூபா 4,882,055 ஆன வரவு மீதி காணப்பட்டதுடன் இம் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 கணக்காய்வுக்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் கணக்கு விடயங்கள் தொடர்பாக அவற்றிற்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்கு விடயம் | பெறுமதி | கிடைக்கப்பெறாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | காணி | 90,000,000 | உரிமையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான உறுதிகள் அல்லது வேறு அவற்றுடன் தொடர்புபட்ட ஆவணங்கள் |
| (ஆ) | கடன்பட்டோர் | 55,500,568 | மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் |

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் | 2004/2005 மதிப்பீட்டு ஆண்டு முதல் 2009/2010 மதிப்பீட்டு ஆண்டு வரை செலுத்த வேண்டிய வருமான வரிப் பெறுமதி ரூபா 54,622,270 தொகையானதுடன் 2011 மார்ச் 31 இல் உள்ளவாறு செலுத்திய வரிப் பெறுமதி ரூபா 31,446,295 ஆகக் காணப்பட்டது. மேலும் செலுத்த வேண்டிய வரித் தொகை 23,175,975 ஆன போதிலும் மீளாய்வாண்டின் போது செலுத்தவேண்டிய வருமான வரியாக ரூபா 10,664,726 தொகை மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) தாபன விதிக்கோவை | |
| I VIII ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் பிரிவு | பதவிநிலை உத்தியோகத்தர்கள் மேலதிக நேரவேலைக் கொடுப்பனவுக்கு உரித்தற்ற எனினும் மீளாய்வாண்டின் போது பதவிநிலை உத்தியோகத்தர்களுக்காக மேலதிக படிப்பணமாக ரூபா 76,989 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| II VIII ஆம் அத்தியாயத்தின் 10(1) ஆம் பிரிவு மற்றும் 1997 பெப்ரவரி 3 ஆம் திகதிய 7/97 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | (i). வார இறுதியிலும் அரசாங்க விடுமுறை நாட்களிலும் ஒரு மாதத்தில் ஒரு நாளிற்கு மேலான நாட்கள் அங்கீகாரம் இன்றி வேலை செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 667,846 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| | (ii). அடிப்படைச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு 1/20 பங்கு படிப்பணம் கணிப்பிட வேண்டிய போதிலும் அடிப்படைச் சம்பளம், வாழ்க்கைப் படிப்பணம் மற்றும் விசேட படிகள் என்பவை அடங்கிய திரண்ட |

| | | |
|---|---|---|
| | | சம்பளத்தில் படிப்பணம் கணிப்பிடப் பட்டிருந்தது. |

(இ) அரசாங்க நிதிப்பிரமாணம்

| | | |
|---|---|---|
| I | நி.பி. 104(3) மற்றும் (4) மற்றும் நி.பி. 1642 | கம்பனியின் 03 வாகன விபத்துக்கள் தொடர்பாக ஆரம்ப அறிக்கையும் ஒன்றும் இறுதி அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>வாகன விபத்துக்கள் தொடர்பாக அண்மையிலுள்ள பொலிஸிற்கு அறிவிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு இடம்பெறாத 02 சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன. |
| II | நி.பி.371(2)(ஆ) | ஒரு சந்தர்ப்பத்தின் போது வழங்கப்பட வேண்டிய குறித்த பணிக்கான கட்டுநிதிப் பெறுமதி ரூபா 20,000 இற்கு மேற்படலாகாத போதிலும் 16 சந்தர்ப்பங்களின் போது அந்த எல்லை மீறப்பட்டு ரூபா 891,100 தொகையான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| III | நி.பி 387 | அரசாங்க வங்கி கணக்கொன்றில் இருந்து வங்கி மேலதிகப்பற்றைப் பெற முடியாத போதிலும் அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட வங்கி மேலதிகப்பற்றிற்காக ரூபா 478,088 தொகையான வட்டி செலுத்தப்பட்டிருந்ததுடன் 2011 மார்ச் 31 இல் உள்ளவாறு வங்கி நடைமுறைக் கணக்கில் நிலவிய மேலதிகப் பற்று மீதி ரூபா 77,233 ஆகக் காணப்பட்டது. |

(ஈ) 2003 யூலை 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரச பொது முயற்சிகள் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| (i) | 42 ஆம் இலக்க 8.3.3 ஆம் பிரிவு மற்றும் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | வருகை மற்றும் செயற்றலின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது படிப்பணமாக ரூபா 7,250,187 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| | (ii) 9.3.1 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் போது ஆட்சேர்ப்பு நடைமுறைகள் இன்றி 10 புதிய ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (உ) | 2000 யூன் 27 ஆம் திகதிய பீஎப்/பீஈ/9 ஆம் இலக்க அரச நிதி திணைக்களம் மற்றும் 2000 மே 02 ஆம் திகதிய பீடீ/பீஈ/3/2000 ஆம் இலக்க அரசாங்க பாதீட்டு திணைக்களச் சுற்றறிக்கை | அரசாங்க கம்பனிகளின் நிதிகளை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்கு முன்னர் உரிய அமைச்சரினதும் நிதி அமைச்சரினதும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறான அங்கீகாரம் இன்றி அரசாங்க வங்கிகளில் நிலையான வைப்புக்களில் ரூபா 436,672,462 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2009 ஒக்டோபர் 30 ஆம் திகதிய 4/5/1 ஆம் இலக்க தேசிய உரங்கள் செயலக சுற்றறிக்கை | சலுகைப் பசளைகளை கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்படலாகாத போதிலும் மீளாய்வாண்டின் போதும் ரூபா 9,276,223 பெறுமதியான உரங்கள் கடனுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 செயற்பாட்டு மீளாய்வு

### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது கம்பனியின் செயற்பாடுகள் ரூபா 326,513,860 தொகையான வரிக்கு முந்திய தேறிய இலாபத்தினை விளைவித்திருந்ததற்கு ஒப்பாக முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னைய தேறிய இலாபம் ரூபா 935,118,273 ஆனமையால் நிதிசார் விளைவின் ரூபா 608,604,413 தொகையான வீழ்ச்சி காணப்பட்டது. மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான நிதிசார் விளைவுகள் பல்வேறு மட்டங்களில் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

| | மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானவை | |
|---|---|---|
| | **2011** | **2010** |
| | **ரூபா** | **ரூபா** |
| (அ) மொத்த இலாபம் | 533,220,673 | 1,285,538,043 |
| (ஆ) வரிக்கு முன் தேறிய இலாபம் | 326,513,860 | 935,118,273 |
| (இ) வரிக்குப் பின் தேறிய இலாபம் | 210,630,411 | 651,559,658 |

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 உரத்தினை எடுத்துச்செல்லல் தொடர்பான ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அவசியமான நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டிராததன் காரணமாக கொள்வனவுக் குழுவினால் நிராகரிக்கப்பட்ட 12 நிறுவகங்களுக்கு போக்குவரத்து நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் தெரிவுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டன.

(ஆ) 2010 ஆம் ஆண்டிற்காக கேள்விகளைச் சமர்ப்பிக்கப்பட்டிராத 58 போக்குவரத்து நிறுவகங்கள் தயாரிக்கப்பட்டிருந்த காத்திருப்புப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(இ) உடன்படிக்கைகள் ஏற்படுத்த முன்னர் போக்குவரத்து நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு கொண்டு செல்கையில் உர இருப்புகள் முறையற்ற விதத்தில் வேறு தரப்பினருக்கு விற்பனை செய்வதற்கு முனைந்த சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்டன.

(ஈ) கேள்வி வழங்கும் வழங்குனர் உரிய மாவட்டங்களின் பிரகாரம் ரூபா 200,000 இற்கும் ரூபா 400,000 இற்கும் இடைப்பட்ட தொகையினை செயலாற்றல் பிணையாக வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு பிணை வைக்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டிருந்ததுடன் இதற்குப் பதிலாக

சேவை வழங்கும் நிறுவகங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய தொகையில் 10% படி கழிக்கப்பட்டு பிணைப் பணம் பூர்த்தியாக்கப்படுதல் என்பதற்கு இணங்க இரு நிறுவகங்களுடன் உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

### 2.2.2 தாமதமான செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2007 ஆம் ஆண்டின் போது ஹம்பாந்தோட்டையில் களஞ்சியம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக திட்டம் தயாரிக்கப்படுவதற்காக ரூபா 253,173 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் ஒதுக்கப்பட்ட காணிக்குப் பதிலாக வேறு இடத்தில் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2011 திசெம்பர் 31 வரையிலும் இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது பொலொன்னறுவை மாவட்டத்தில் களஞ்சியம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக காணியைச் சுத்திகரிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 39,000 தொகை நடைமுறை வேலைக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அக் காணியை கையேற்பதற்கு 2011 திசெம்பர் 31 வரையிலும் கம்பனிக்கு முடியாதிருந்தது.

### 2.2.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 07 ஆண்டுகளுக்கு மேல் பழமைவாய்ந்த ரூபா 36,062,867 ஆன 65 கடன்பட்டோரில் ரூபா 7,197,644 ஆன 09 கடன்பட்டோரிற்காக மாத்திரம் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

(ஆ) சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட 04 கடன்பட்டோர் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்கையில் நிறுவகம் பின்பற்றியிருந்த நடைமுறைகள் திருப்தியற்ற நிலையில் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

(i) பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 300,000 தொகை அறவிடப்பட்டு உரிய வழக்கு முடிவுற்றதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மேலும் ரூபா 96,126 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ii) கடன்பட்டோரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய பணம் ரூபா 2,672,073 ஆன போதிலும் ரூபா 2,550,906 தொகை மாத்திரம் அறவிடப்படுவதற்காக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

(iii) சட்ட மா அதிபதி திணைக்களத்தினால் கோரப்பட்டிருந்த ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிராத காரணத்தினால் கடன்பட்டோர் ஒருவரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 287,160 தொகைக்கு உரிய கோவை மூடப்பட்டிருந்தது.

(iv) கடன்பட்டோரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 254,800 தொகைக்காக 2008 ஆகஸ்ட் 10 ஆம் திகதிக்குப் பின்னர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 திசெம்பர் 04 ஆம் திகதி முதல் 2011 சனவரி 26 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 63 சந்தர்ப்பங்களின் போது கமநல சேவைகள் மத்திய நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்த உர இருப்பிற்காக பொருட்களை கையேற்கும் சிட்டைகள் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் அப் பெறுவனவுகளை உறுதிப்படுத்துவதற்காக 2011 மார்ச் 25 ஆம் திகதிய கடிதம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) 2010 சிறு போகத்தின் போது கமநல சேவை நிலையத்திற்கு பகிர்ந்தளிக்கப்படுவதற்காக தேசிய பசளை செயலகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அளவுகளைப் பார்க்கிலும் மிகையாக 491.07 மெட்ரிக் தொன் பசளைகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

(உ) 2010/ 2011 பெரும் போகத்திற்காக தெஹியத்தகண்டிய கமநல சேவைகள் நிலையத்திற்கு 1,689.10 மெட்ரிக் தொன் யூரியா பசளையைப் பகிர்ந்தளிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த அளவைப் பார்க்கிலும் கூடியளவு 12 மெட்ரிக் தொன் யூரியா பசளைகள் வழங்கப்பட்டிருந்தன.

(ஊ) மீளாய்வாண்டின் போது இரண்டு கமநலசேவை நிலையங்களுக்கு 7.7 மெட்ரிக் தொன் பசளைகள் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளுக்கு மிகையாக வழங்கப்பட்டிருந்தன.

(எ) இலங்கை உரக் கம்பனியினால் உரம் பகிர்ந்தளிக்கப்படும் நுவரெலியா மாவட்டத்தினைச் சார்ந்த கமநல சேவைகள் நிலையங்கள் சிலவற்றிற்கு 2010 சிறு போகத்தின் போது கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனியினால் 204.20 மெட்ரிக் தொன் உரங்கள் முறையான அங்கீகாரம் இன்றி வழங்கப்பட்டிருந்தன.

### 2.2.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

155,733 மெட்ரிக் தொன் உர மானியங்களுக்காக புரள்வு வரி செலுத்தப்படுவதற்காக அரசாங்கத்தினால் மீளாய்வாண்டின் போது உர மானியத்தின் கீழ் ரூபா 9,935,765 கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அத் தொகையில் ரூபா 8,535,379 தொகை மாகாணசபைக்குச் செலுத்தப்பட்டு மிகுதி ரூபா 1,400,386 தொகை கம்பனியின் வருமானமாக பிடித்து வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இறக்குமதி செய்யப்பட்ட உர இருப்பிற்கான கடனைத் தீர்த்து வைப்பதற்கு திறைசேரியினால் 2010 யூலை 06 ஆம் திகதி ரூபா 513,093,837 மானியமாக வழங்கப்பட்டிருந்த போதிலும் அக் கடன் தொகை 2010 யூலை 08 ஆம் திகதி தீர்க்கப்பட்டிருந்த காரணத்தினால் 02 நாட் தாமதத்திற்கான கடன் வட்டியாக ரூபா 312,657 தொகை மிகையாகச் செலுத்தப்பட வேண்டியிருந்தது.

### 2.2.6 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் ஒரு மோட்டார் வாகனம் 2010 யூலை மாதம் முதல் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்ட போதிலும் 2009 நவம்பர் 13 ஆம் திகதிய 438 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் பழுதுபார்க்கப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்படுவதற்கோ விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இருப்பு மெய்மையாய்வுத் தினமாகிய 2011 பெப்ரவரி 13 இல் உள்ளவாறும் மிகவும் குறைவாக நகர்ந்த ரூபா 16,863,254 பெறுமதியான 626.096 மெட்ரிக் தொன்களான உர இருப்பு களஞ்சியத்தில் காணப்பட்டது.

**2.2.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

ஒரு ஊழியருக்கு பணிக்கொடைக் கொடுப்பனவாக 2001 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 33,286 தொகைப் படி இரு தடவைகள் பணிக்கொடைக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

**2.2.8 வாகன பயன்பாடு**

கமநல அமைச்சிற்குச் சொந்தமான 4 வாகனங்கள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக உரக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்கள் முறையாக கையேற்கப்பட்டிராமையால் நிறுவகத்தின் சொத்துக்களாக இனங்காணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.9 கூட்டுத் திட்டமும் செயற்பாட்டுத் திட்டமும்**

2006 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்ட 2006 – 2011 வரையான கூட்டுத் திட்டம் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்டிராததுடன் வருடாந்தம் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத்திட்டத்திற்கும் கூட்டுத்திட்டத்திற்கும் இடையில் பாரிய வேறுபாடு காணப்பட்டது.

**2.2.10 கணக்காய்வு மற்றும் முகாமைத்துக் குழு நியமித்தல் மற்றும் அதன் செயற்பாடும்**

2000 மார்ச் 15 ஆம் திகதிய பீஎப்/பீஈ/7 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2000 யூலை 12 ஆம் திகதிய ஐ/ஏ/ஐ/2000/1 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.11 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீடு செய்யப்பட்ட தரவுகளுக்கும் உள்ளபடியான தரவுகளுக்கும் இடையில் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் காலத்துக்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கடன் அறவிடப்படுதல்

(ஆ) முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்த்தல்

(இ) பல்வேறு கொடுப்பனவுகள் கொடுத்தல்

(ஈ) வாகன நிர்வாகம்

(உ) உரப் பகிர்வும் கொண்டு செல்லலும்